Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 97

வியாழக்கிழமை
03 மார்ச் 2022

மாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 751 |
| மொத்தம் | 6,47,699 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 23 |
| மொத்தம் | 16,267 |

**தடுப்பூசி விவரம் பெற...**
VAC என டைப் செய்து இடைவெளிவிட்டு உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை ஆங்கில எழுத்துடன் 1919 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ் செய்தால் உங்களின் தடுப்பூசி விவரத்தை பெறலாம்.

# 600 பொருள்களுக்கு இறக்குமதித் தடை

- நீள்கிறது எரிபொருள் நெருக்கடி
- மத்திய வங்கி ஆளுநரும் அதிருப்தி
- அரசாங்கம் அவசர ஆலோசனை



கொழும்பு, மார்ச் 3

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், நெருக்கடிகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக அரசாங்கம் அவசர ஆலோசனைகளை நடத்தி வருகின்றது. நாடு அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையில், அத்தியாவசியமற்ற மேலும் 600 பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதிப்பது என்று அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. 15

## மின் உற்பத்தி நிலையங்கள் 'அவுட்'!

கொழும்பு, மார்ச் 3
எரிபொருள் தட்டுப்பாட்டால் 8 மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்துள்ளன என்று இலங்கை மின்சார சபைத் தகவல்கள் தெரிவித்தன.
உதுரு ஜனனி மற்றும் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே தற்போது செயற்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (எ-14,ரி1)

## மசகு எண்ணெய் விலை 'கிடு கிடு!'

கொழும்பு, மார்ச் 3
சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்ந்துள்ளது.
ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 110 டொலரை எட்டியுள்ளது என்று சர்வதேசஊடகங்கள் தெரிவித்தன. கடந்த 7 ஆண்டுகளில் 15

## இன்றும் ஏழரை!

கொழும்பு, மார்ச் 3
இன்று வியாழக்கிழமையும் நாடளாவிய ரீதியில் ஏழரை மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.
காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் 5 மணி நேர மின்வெட்டும், மாலை 6 மணியிலிருந்து இரவு 11 மணி வரையான காலப்பகுதியில் 15

## இலங்கை வந்தது எரிபொருள் கப்பல்

கொழும்பு, மார்ச் 3
சிங்கப்பூரில் இருந்து வந்த எரிபொருள் கப்பலில் இருந்து எரிபொருளை இறக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்தது. 15

## பச்லெட்டைச் சந்தித்த கொழும்பு பேராயர்!



ஜெனிவா, மார்ச் 3
கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
ஜெனிவாவில் தற்போது மனித உரிமைகள் சபையின் 49 ஆவது 15



*முச்சந்தி முரளி*

"இனி இலங்கையில இருக்கிறவை எல்லோருக்கும் ஏழரை தொடங்கிட்டு என்டு குறியீடாச் சொல்லினம் போல..."

## இன்று பி.சி.ஆர். இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 3
வெளிநாடு செல்பவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் 15

## வீடு புகுந்து தாக்கிய கும்பல்; மடக்கிப் பிடித்த ஊரவர்கள்!

நவாலியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
நவாலியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து கும்பல் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடைந்துள்ளார். தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் வீட்டாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். 15

## யாழ். ஒருங்கிணைப்பு குழுவின் தனிக்காட்டுத்தனத்துக்கு ஆப்பு!

இணைப்பாளரை நியமிக்கிறார் பிரதமர்



கொழும்பு, மார்ச் 3
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கான பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்படவுள்ளார் என்றும் இன்று அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது என்றும் நம்பகரமாக 15

## கடலில் மூழ்கி முதியவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 3
ஊர்காவற்றுறை, சுருவில் கடலில் மூழ்கி நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார் 15

## ரஷ்யாவிடம் கடன் கேட்கும் இலங்கை

கொழும்பு, மார்ச் 3
ரஷ்யாவிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடனாக 15

## உக்ரைனின் கெர்சன் ரஷ்யப் படைகள் வசம்

6000 ரஷ்யப்படைகள் பலி
இரு தரப்புக்குமிடையே கடும் மோதல்

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைனின் மீது நேற்றும் 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உக்ரைன் போரால்

# இந்தமுறை சிறுபோகத்துக்கும் இரசாயன உரம் கிடைக்காது?

**கொழும்பு,மார்ச் 3**

**உக்ரைனில் போர் இடம்பெறுவதால், இந்த முறை சிறுபோகத்துக்கும் இரசாயன உரத்தை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்படக்கூடும் என்று உர இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

நிவாரணத் திட்டத்தின் கீழ் 38 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மியூரியேட் ஒவ் பொட்டாஸ் உரத்தை, இரண்டு அரச உர நிறுவனங்களின் ஊடாக இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மியூரியேட் ஒவ் பொட்டாஸ் உரம், பெலாரஸில் இருந்தே அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றது. தற்போது உக்ரைன் போர் காரணமாக, உர இறக்குமதியிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் வேறு நாடுகளில் இருந்து உரத்தை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் உர இறக்குமதிக்கு டொலர் பிரச்சினையும் தாக்கம் செலுத்தும் என்று உர இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி பசாட் வீரசேகர தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)



# 999 பேருக்கு இன்று பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தில் இரண்டாவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 5ஆம்திகதி வரை நடைபெறவுள்ள பட்டமளிப்பு வைபவத்தின் எட்டு அமர்வுகளில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இன்றைய மூன்று அமர்வுகளிலும் 999 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர். (ஒ-5)

# யாழ்.பல்கலைப் பட்டமளிப்புக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு பல்கலைக்கழக சுற்றுப்புறப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் முகமாக விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை முதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரையான மூன்று தினங்களிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி நோக்கிய ஆடியபாதம் வீதியூடான பயணம் கொக்குவில் ரயில் கடவை வரை ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும் கொக்குவில் சந்தியிலிருந்து திருநெல்வேலி சந்தி ஊடாகப் பயணிப்போர் பிறவுண் வீதி மற்றும் இராமநாதன் வீதியூடாக பலாலி வீதியை சென்றடைய மாற்றுப் பாதையைப் பயன்படுத்துவதுடன் பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியிலிருந்து கலட்டிச் சந்தி வரையான போக்குவரத்தும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுகின்றது என்று நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஒ-14-20)



# எரிவாயுவுக்கும் வரிசை

யாழ்ப்பாணம்,மார்ச் 3

யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் எரிவாயு விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

எரிவாயு விநியோக நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் எரிவாயுவைப் பெறுவதற்கு காத்திருந்தனர். அங்கு விநியோகஸ்தர்களுடனும் முரண்பட்டனர்.

"இந்த அரசால் நாங்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றோம். டீசல் இல்லை. பால்மா இல்லை. எரிவாயு இல்லை. இந்த அரசிடம் எதுவுமே இல்லை" என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(ஒ-4-23)

# ரஷ்ய-உக்ரைன் சுற்றுலாவிகள் மோதலில் ஈடுபடாமல் கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 3

இலங்கையில் தங்கியுள்ள ரஷ்யா மற்றும் உக்ரைன் சுற்றுலாவிகள் மோதலில் ஈடுபடாமல் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள 4 ஆயிரம் உக்ரைனியர்களும், 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரஷ்யர்களும் நாட்டில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான சுற்றுலா நுழைவிசைவு காலம் 2 மாதங்களுக்கு கட்டணமின்றி நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் ஒரே ஹோட்டலில் அல்லது ஒரே பிரதேசத்தில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இடையில் மோதல் ஏற்படாமல் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-14)

# எரிபொருள் தட்டுப்பாட்டால் அரிசி ஆலைகளும் முடக்கம்

வவுனியா,மார்ச் 3

எரிபொருள் தடுப்பாட்டு மற்றும் மின்சாரத்தடையால் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலைகளின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம்பெறுவதால், வவுனியா உட்பட வன்னி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல் வவுனியாவில் அமைந்துள்ள அரிசி ஆலைகளால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

எனினும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடையால் நெல்லைப் பதப்படுத்தும் இயந்திரங்கள் செயலிழந்துள்ளன.

இதனால் அறுவடை செய்யப்பட்டு, கொள்வனவு செய்யப்படும் நெல் மூடைகள் ஆலைகளில் தேக்கமடைந்துள்ளன.

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தயக்கம் காட்டியுள்ளனர்.

(ஒ-4-110)

# பியூஸ்லஸின் இறப்பில் சந்தேகம் நீதியான விசாரணை தேவை

### செல்வம் எம்.பி. வலியுறுத்து



மன்னார், மார்ச் 3

தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸின் மரணத்தில் சந்தேகம் உள்ளது. நீதியான விசாரணை தேவை என்று வெளியுறவுத் துறை அமைச்சருக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் அனுப்பியுள்ளார்

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் 2018ஆம் ஆண்டுமுதல் இலங்கையின் தேசிய கால்பந்து அணியின் வீரராக இருந்து வருகிறார். பல சாதனைகளைப் படைத்த ஒரு சிறந்த வீரன். இந்த விளையாட்டுத் துறையில் தன்னை முற்றும் முழுதுமாக ஈடுபடுத்தித்தன்னை வளர்த்துக்கொண்டு தனது தாய் நாட்டுக்கு அவர் புகழைத் தேடித்தந்தார். இவருடைய திறமையின் நிமித்தம் மாலைதீவு வலன்சியா விளையாட்டு கழகத்தினரால் அழைக்கப்பட்டு அந்தக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி வந்த நிலையில், கடந்த 26ஆம் திகதி அவர் அகால மரணமடைந்த செய்தி பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இவருடைய மரணம் கொலையா என்ற சந்தேகத்தையும் எல்லோர் மத்தியிலும் எழுப்பியுள்ளது.

எனவே பியூஸ்லஸின் மரணத்துக்கான காரணத்தை ஆய்ந்து விசாரித்து இந்த மரணத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் -என்றுள்ளது.

(ம-213)

# நேர்முகத்தேர்வில் தெரிவாகியோர் விவரம் வெளியானது

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தெரிவாகியோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

விவரங்களை www.np.gov.lk எனும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சுப்பையா அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இராணுவத்தால் கைதானார்களா?

## ஆராயவேண்டியுள்ளதாம் சொல்கிறார் ஓ.எம்.பி. தவிசாளர்

**கொழும்பு, மார்ச் 3**

**காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் பெருமளவானவை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் அல்லது பாதுகாப்புத்தரப்பினரால் அழைத்துச்செல்லப்பட்டவர்களுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. ஆனால், அத்தகைய சம்பவங்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் உண்மையிலேயே காணாமலாக்கப்பட்டார்களா? அல்லது பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் அழைத்துச்செல்லப்பட்டார்களா? என்று ஆராயவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.**

இருப்பினும் தற்போதைய சட்டத்தின் ஊடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையின்கீழ் அதனைச் செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதனால், அதற்கேற்றவாறு சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டிய தேவையிருப்பதாக காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஸ் கட்டுலந்த ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற 21 ஆயிரத்து 374 முறைப்பாடுகளில் 12 முறைப்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு ஏற்புடைய ஆதாரங்கள் காணப்படுவதாகவும் கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 650 முறைப்பாடுகள் அடுத்தகட்ட விசாரணைகளுக்காகத் தயார்நிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடம் மற்றும் அவசியமான முன்மொழிவுகளை செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலர் நிமல் அபேசிறி ஆகியோர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி ஆணைக்குழுவின் அமர்வில் முன்னிலையாகி காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையில் அதன் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ஒ-இ)

## மருத்துவர்களுக்கு போக்குவரத்துப்படியாக ரூ.70 ஆயிரம்

கொழும்பு, மார்ச் 3

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக போக்குவரத்துப் படியாக 70 ஆயிரம் ரூபாவை மருத்துவர்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச சேவைகளின்போது போக்குவரத்து வசதிகள் குறித்து பொது நிர்வாகச் சுற்றறிக்கை 22/99 மூத்த அரச ஊழியர்களுக்கு ஓர் எரிபொருள் படியை அல்லது சாரதியையும் எரிபொருளையும் அனுமதித்தபோதிலும் இது மருத்துவர்களை உள்ளடக்கவில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் செனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு கொடுப்பனவுகள் ஆணைக்குழு, பொது நிர்வாக, சுகாதார மற்றும் நிதி அமைச்சுக்கள் இந்தச் சுற்றறிக்கையில் மருத்துவர்களையும் உள்ளடக்க அனுமதித்தபோதும் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. (ஒ-ரி1)

## கொவிட்டை காரணம் காட்டிய அரசு இனி உக்ரைன்மீது பழி போடும்!

கொழும்பு, மார்ச் 3

அடுத்த மூன்று ஆண்டுகளில் ஏற்படும் தோல்விகளுக்கு உக்ரைனின் நெருக்கடியை அரசு காரணம் காட்டும் என்றும், நாட்டின் தற்போதைய நிலைக்கு பொறுப்பேற்க தற்போதைய அரசு தயாராக இல்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனாவைக் காரணம் காட்டித் தனது தோல்வி களை மறைக்க முயற்சிக்கும் அரசு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு உக்ரைன் நெருக்கடியைக் காரணம் காட்டும். இதேவேளை, தற்போதைய



எரிபொருள் தட்டுப்பாட்டின் பின்னால் பெரும் மோசடி உள்ளது. சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்ய முயலும் தரப்பினரே இந்தத் தட்டுப்பாட்டை உருவாக்குகின்றனர். நாட்டில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களால் 5 ஆயிரம் மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தி செய்யமுடியும். ஆனால், 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன்னே உற்பத்தி செய்யப்படுகின்றது- என்றார். (ஒ-ரி1)

## எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அருகில் பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 3

நாடு முழுவதிலுமுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் சுற்றி ஒரு பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நுகர்வோர் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும்போது ஏற்பட்ட மோசமான சம்பவங்களின் விளைவாகவே இப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கருகில் போக்குவரத்தைக் குறைப்பதற்கும் பொதுமக்களிடையே ஏற்படக்கூடிய குழப்பங்களை அடக்குவதற்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கடமை ஒதுக்குமாறு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார். (ஒ-ரி1)




நாடு கிடக்கிற கிடையில எல்லாரும் எளியவையின்ர வயித்திலைதான் அடிக்கினம். வசதி உள்ளவைக்கு ஒரு மாதிரியும் இல்லாதவைக்கு இன் னொரு மாதிரியும்தான் இலங்கையில சட்ட திட்டங்கள் இருக்குது போல. இந்த முறை உரப்பிரச்சினை, வெள்ளம் எண்டு வேளாண்மை செய்தாக்களுக்கு சிக்கலுக்கு மேல சிக்கல்.

அதோட வேலைக்கு ஆக்களைப் பிடிக்கிறதும் பெரும்பாடு. பத்தையா வளர்ந்த புல்லை அழிக்கிறதுக்கும் மருந்தில்லை. கடைசில அறா விலைக்கு மருந்தையும் உரத்தையும் வாங்கிக் கொட்டி நெல்லை விதைச்சால் அதையும் வந்து வெள்ளம் கொண்டுபோட்டுது.

இப்பிடி அடிமேல அடியா வாங்கிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு, ஆனைப் பசிக்கு சோளப்பொரி மாதிரி கொஞ்சக் காசை நஷ்ட ஈடா அரசாங்கம் குடுக்குது. இந்தமுறை நெல் அழிவுக்கு நஷ்ட ஈடு குடுக்கிறதுக்காக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கட பிரிவில உள்ள கமக்கந்தோரில பதியச் சொல்லி அறிவிச்சிருந்தவை.

இந்த அறிவிப்பு வந்த கொஞ்ச நாளில, வலிகாமம் பகுதியில உள்ள ஒரு கமக்கார அமைப்பிட்ட விவசாயிமார் போயிருக்கினம். ஆனால், அவையின்ர நெல்லு அழிவு விவரத்தை கந்தோரில இருந்தாக்கள் கணக்கிலை எடுக்கேல. - அதெல்லாம் பதிஞ்சு ரெண்டு கிழமைக்கு முதலே அனுப்பிப்போட்டம். நீங்கள் இப்ப வந்து நிக்கிறியள். நாங்கள் ஒண்டும் செய்யேலாது - எண்டு பதியவந்த விவசாயிகளை திருப்பி அனுப்பிப் போட்டினம். அதைப் போய் கமக்கந்தோரில கேட்டால், அங்கையும் அதே பதில் தானாம். -ஆனால், வேற கமக்கந்தோர்களில இப்பவும் நெல் அழிவுக்கு பதிஞ்சு கொண்டுதான் இருக்கினம். அங்கையெல்லாம் இன்னமும் பதியலாம் எண்டால் ஏன் இந்தக் கந்தோரில மட்டும் பதியேலாது?- எண்டு அந்தப் பிரதேச விவசாயிகள் பட்சியிட்ட முறையிட்டிச்சினம்.

உடனேயே பட்சி சம்பந்தப்பட்ட திணைக்களக்காரருக்கு போன் பண்ணி - ஏன் விவசாயிகளை இப்பிடிச் செய்யிறீங்கள்? -எண்டு நியாயம் கேட்டிச்சு. அதுக்கு அவை -இப்பிடி நெற்செய்கையில அழிவு ஏற்பட்டால் விவசாயிகள் 14 நாளுக்குள்ள தாங்களே போய் கமக்கார அமைப்பு, கமநலசேவை நிலையம் இதுகளில பதியோணும். அதுக்கு பிறகு நாங்கள் ஒரு குழுவை அனுப்பி அழிவு விபரத்தை உறுதிப்படுத்திப்போட்டு, நட்ட ஈட்டுக்கு சிபார்சு பண்ணுவம். இவை முதல் தாங்கள் வந்து பதியோணும் எண்டது தெரியாமல் இருந்திருக்கினம். அதுதான் அவையின்ர பதிவை எடுக்கேலாமல் போயிருக்கு- எண்டு சொல்லிச்சினம்.

ரண்டு தரப்பும் தங்கட பக்க நியாயத்தைச் சொல்லேக்க, அந்தந்தத் தரப்பில நியாயம் இருக்கிற மாதிரித்தான் படுகுது. அப்ப ரண்டு தரப்பும் இனியும் இப்பிடி நடக்காமல் இருக்க ஏதும் ஒரு முறையைக் கொண்டு வந்தால் நல்லமெல்லோ...?

- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவனை பாம்பு தீண்டியது

சாவகச்சேரி, மார்ச் 3

அருகிலுள்ள ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டுக்காகச் சென்ற 12 வயதுச் சிறுவன் வீதியில் விஷப்பாம்பால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் பளை இந்திராபுரத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-4-9)

# உற்சவம்

சாவகச்சேரி, மார்ச் 3

மட்டுவில் வடக்கு அத்தாய் ஸ்ரீமாதா புவனேஸ்வரி அம்பாள் கோயில் உற்சவம், எதிர்வரும் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன்ஆரம்பமாகவுள்ளது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில், எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-14-9)

# உதயன் செய்தியாளர் கௌரவிப்பு



உதயன் பத்திரிகையின் மூத்த செய்தியாளர் ஐ.கிருஷ்ணனுக்கு, ஊடக சமூக கலைமாமணி என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு, பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அறநெறிச் சமூக விழாவில், கோவில் நிர்வாகத்தினரால் நீண்டகாலம் ஆற்றிவரும் ஊடகப் பணிக்காக இவருக்கு இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. பளைப் பிரதேச செயலர் சி. ச.கிருஷ்ணேந்திரன் பட்டத்தை வழங்கினார்.

கடந்த 12 வருடங்களாக மகா சிவராத்திரியன்று நடைபெறும் அறநெறிச் சமூக விழாவில் பட்டம் வழங்கப்படுகின்றது.

இவரது ஊடகப் பணியை மதிப்பளிக்கும் வகையில் ஏற்கனவே சாவகச்சேரி நகரசபையின் உயரிய விருதான சமூகச்சுடர் பட்டமும், தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பிரிவினரால் பிரதேச உயரிய விருதான கலைசாகரம் எனும் விருதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சிறாப்பர் மடம் மீளச் செயற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 3

கீரிமலை சிறாப்பர் மடத்தில், அன்னதானம் மற்றும் தாகசாந்தி வழங்கும் செயற்பாடுகள், சுமார் நான்கு தசாப்தங்களின் பின்னர் நேற்று முன்தினம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போர் காரணமாக, சிறாப்பர் மடம் அழிவடைந்த நிலையில், சிறாப்பர் நிதியத்தின் உதவியுடன் தொல்லியல் திணைக்களத்தால் மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நகுலேஸ்வர ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு, சிறாப்பர் நிதியத்தின் உறுப்பினர் கௌரி பொன்னையாவின் நிதிப்பங்களிப்புடன்,தொல்லியல் திணைக்களத்தின் வழிகாட்டுதலுடன், யாழ்.பல்கலைக்கழக கலாசார சுற்றுலாத் துறை மாணவர்களின் பங்களிப்புடன் சிறாப்பர் மடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஓ-4-125)



இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும், இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதேநேரம், மகா சிவராத்திரி விரதமான நேற்றுமுன்தினம் அமெரிக்கத் தூதுவர், கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (ம)

# ஈழத்துச் சிதம்பரத்தில் இந்தியத் தூதர் வழிபாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 3

மஹா சிவராத்திரியை முன்னிட்டு, காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில், யாழ். இந்திய துணைத் தூதர் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், இலங்கை, இந்திய மக்களின் நலனுக்காக சிறப்புப் பூசை வழிபாட்டில் ஈடுபட்டார்.

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. வழிபாட்டில் தூதரக அதிகாரிகளும் பங்கேற்றனர். (ஓ-4-125)

# மல்வில் ஆலயத்தில் அறநெறிச் சமூக விழா

பளை.மார்ச் 3

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில், அறநெறிச் சமூக விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது .

நிகழ்வில் பல்கலைக் கழக அனுமதி பெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த 25 மாணவர்கள், பிரதேசத்தில் நீண்ட காலமாக கலை, இலக்கிய, சமய ,சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் நால்வர் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

50 வருடங்களாக சமாதான நீதிவானாகப் பணியாற்றும் ம.குமாரவேலு, ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டு வரும் நடராசா மற்றும் திருமதி முத்துப்பிள்ளை சின்னத்தம்பி , ஊடகப் பணியாற்றும் உதயன் பத்திரிகையில் மூத்த செய்தியாளர் ஐ.கிருஷ்ணன் ஆகியோர் சமூக கலைமாமணி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட பண்ணிசை , மாலை கட்டுதல், கோலம் போடுதல், மற்றும் கதை கூறல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஓ-4-9)



# நவரட்ணராசாவுக்கு அன்பே சிவம் விருது

இந்த முறை அன்பே சிவம் விருது, அறப்பணித் தந்தை வவுனியா கோவிற்குளம் சிவன் கோவில், அருளகம் சிறார்கள் இல்லம், சிவன் முதியோர் இல்லம், சிவன் கோசாலை ஆகியவற்றின் நிறுவுநரும், தலைவருமான சிவத்திரு. ஆ.நவரட்ணராசாவுக்கு வழங்கப்படவுள்ளது.

ஆலயம் சமூக மையம் என்பதை மிக உன்னதமாக வன்னி சிவப் பிரந்தியத்திலே நிறுவிக் காட்டியவர் அறப்பணித் தந்தை நவரட்ணராசா. போர் முடிவில் பல நூறு சிறார்களைத் தத்தெடுத்தார். சிவன் முதியோர் இல்லத்தை நிறுவி ஏதிலிகளாக நின்ற மூத்தோரை பொறுப்பெடுத்தார். 200க்கும் மேற்பட்ட சிறார்கள் இன்று அருளகத்தில் உள்ளனர். 200 பசுக்களைக் காத்து நிற்கும் சிவன் கோசாலையையும் உருவாக்கி, பராமரித்து வருகின்றார்.

ஆண்டு தோறும் மகா சிவராத்திரி தினத்தில் இலங்கை சைவ மகா சபையால் இந்த விருது அறிவிக்கப்படும். (ஓ-4-125)



# பாலாவியில் குவிந்த பக்தர்கள்

மன்னார்,மார்ச் 3

சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீச்சர ஆலய பாலாவி தீர்த்தக்கரையில், பக்தர்கள் அதிகம் குவிந்து, தீர்த்தக் காவடி எடுத்து தமது கையாலேயே லிங்கப்பெருமானுக்கு அபிஷேகம் செய்தனர்.

இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் அதிகமான பக்தர்கள் திருக்கேதீச்சரத்துக்கு வருகை தந்திருந்தனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அதிகளவான பக்தர்கள் பாலாவியில் தீர்த்தமாடியதை அவதானிக்க முடிந்தது. (ஓ-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மருத்துவமனையில் நோயாளர் விடுதிக்கட்டடம் திறப்பு





யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 124 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று தள பெண் நோயாளர் விடுதிக் கட்டடத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
புதிய கட்டடத்தொகுதியை ஜேர்மனியின் பிரபல தொழில் அதிபரும் அரசியல்வாதியுமான 'இயன். கே.கரன்', எம்.ஜே.எப்.அறக்கட்டளை நிதிய அறங்காவலர்களான டில்கான் பெர்னாண்டோ, கே.ஆர். ரவீந்திரன், ராஜன் ஆசீர்வாதம் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்துவைத்தனர்.
எம்.ஜே.எப். அறக்கட்டளை நிதியம் மற்றும் இயன் பார்பராகரன் நிதியம் இதற்கான நிதிப்பங்களிப்பை மேற்கொண்டிருந்தன.
பெண்கள் உளநல சிகிச்சை விடுதி, பெண்கள் மருத்துவ விடுதி, பெண்கள் சத்திரசிகிச்சை விடுதி என 100 படுக்கை வசதிகளைக் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. (வ-20)



கிளிநொச்சி தெற்கு வலயத்தின் கரைச்சிக் கோட்ட தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு, தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.பரணிதரனின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது. (ம-14,159)

# 153 தாதியர்கள் சேவையில் இணைவு



கொழும்பு,மார்ச் 3
கொழும்பு தாதியர் கல்லூரியின் 153 தாதியர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் உறுதிமொழி ஏற்று, சேவையில் இணைந்தனர். இந்த நிகழ்வு அலரிமாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தருமான முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார அமைச்சின் பிரதிப் ப[illegible] எச்.டி.பி. ஹேரத், கொழும்பு தாதியர் கல்லூரி யின் அதி[illegible] உட்படப் பலர் கலந்துகொண்டனர். (வ-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதியொன்றிற்கு நன்கு அனுபவமுள்ள பின்வரும் வேலையாட்கள் தேவை.

✓ சமையலாளர்கள்:- *Indian, *Chinese (உணவு தயாரிப்பாளர்கள்)

✓ Housekeeping:- *Supervisor, *Room Attendant

முன் அனுபவத்திற்கேற்ப தங்குமிடம் மற்றும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (CS 18659) (4/6)

தொடர்பு : 076 624 8529, 077 780 3203


## கண்ணீர் அஞ்சலி




தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா
யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய விரிவுரையாளர்
**திரு. வீரசிங்கம் மீனேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி**
**வீரசிங்கம் மீனாட்சியம்மா**
அவர்கள் கடந்த 27.02.2022 இறைபதம் எய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவக யாழ்ப்பாணப் பிராந்திய ஓய்வபெற்ற இணைப்பாளரும் தற்போதைய இணைப்பாளரும், விரிவுரையாளர்களும்.

(CS 18627) (2/6)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கனகசபாபதி



தோற்றம் 06.06.1935 மறைவு 02.03.2022

இணுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகசபாபதி அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை காலமானார்.
அன்னார் புஸ்பராணி அவர்களின் அன்பு கணவரும், ஜெனார்த்தனன் (தாதிய உத்தியோகத்தர்- ஆதார வைத்தியசாலை -தெல்லிப்பழை), வசீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- சுகாதார அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற செல்லப்பா பூரணம் அவர்களின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை மனோன்மணி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினப்பிரகாசம், சோமசுந்தரம், சுப்பிரமணியம், ஆகியோரின் அன்பு சகோதரனும், க.ஆதினி, க.ஆதிரையன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு. (CS 18664 (4/6)

தகவல்
குடும்பத்தினர்
077 555 2030,077 384 5702

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி விசுவநாதன்

( வலி கிழக்கு பிரதேச சபை ஓய்வூதியர்- புத்தூர்), சமாதான நீதவான்.

புத்தூர் மேற்கை பிறப்பிடமாகவும் உசன், வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விசுவநாதன் 02.03.2022 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இலக்சுமிப்பிள்ளை அவர்களின் அன்பு புதல்வரும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் விஜயலக்சுமி அவர்களின் அன்பு கணவரும், சிவசுதன், பிரதீபன் (பானுஷா கட்டிட ஒப்பந்தகாரர்), ராகுலன் (பிரான்ஸ்), நிரூபன் (உசன்), தர்சினி (இலண்டன்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், வரதலக்சுமி, வனிசா, விபுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தவனேஸ்வரி, தர்மவதி (தயா), காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, சிவசுப்பிரமணியம், ஸ்ரீஸ்கந்தராசா, ஆகியோர்களின் பாசமிகு சகோதரனும் பொன்னம்பலம், இராசரத்தினம், விஜயரத்தினம், அன்னலட்சுமி காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பானுஷா, டினோஜன், சக்சனா, நதிஷ், கேசனா, ஜனுஷன், கசானி, சக்ஸன்,.ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் (வல்வெட்டி) இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
பிரதீபன்
077 5212 442

(CR 7988) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சை-2022

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை அமரர் சௌபாக்கியவதி இராஜரட்ணம் அவர்களின் ஞாபகார்த்தமாக, சட்டத்தரணி திரு. இராஜரட்ணம் செல்வஸ்கந்தன் அவர்களால், இதுவரை தரம் 8 மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வந்த இப்பரீட்சை இந்த ஆண்டில் இருந்து தரம் 9 மாணவர்களுக்கு நடத்தப்பட இருக்கிறது என்பதை அறியத்தருகிறோம். இப் பரீட்சையை எதிர்வரும் மே மாதம் 24ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். விண்ணப்பங்கள் யாவும், மாணவர் முழுப்பெயர், பிறந்ததிகதி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 31.03.2022 க்கு முன்னதாக, அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பரிசில் விபரம்**

- 1ஆம் இடம் - 40,000.00
- 2ஆம் இடம் - 30,000.00
- 3ஆம் இடம் - 20,000.00
- 4,5,6ஆம் இடங்கள் - 15,000.00
- 7,8,9,10ஆம் இடங்கள் - 10,000.00
- ஆறுதல் பரிசுகள் - 5,000.00

(CR 37182) (4/6)

அதிபர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1955



மறைவு 02 . 03 . 2022

### பொன்னுத்துரை சிறீகரன்

**(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி, முன்னாள் ஆசிரியர், ஏஞ்சல் இன்டர்நெஷனல் பாடசாலை)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிறீகரன் அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் யோகரட்ணம் அவர்களின் அருமை மருமகனும், ரஜனி (ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், ரகுராஜ் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை), ரூபினி (சுற்றாடல் உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிருதிவி (பொறியியலாளர், நீர் வழங்கல் அமைச்சு, கிளிநொச்சி) அவர் களின் அன்பு மாமனாரும், ரஞ்சிதசோதி (கனடா), ஞானாம்பிகை (மலேசியா), கருணாநிதி (UK), செல்வதி (கனடா), பவானி (கனடா) காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் அருமைச் சகோதரனும், ரஞ்சிற் (USA) அவர்களின் அருமை மைத்துனரும், சந்திரகுமார் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி)-சசிகலா அவர்களின் சம்பந்தியும், யுஹாசினியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
021 225 5647
ரஜனி-0777743276

(CS 18652) (4/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 08 . 1936



இறப்பு 01 . 03 . 2022

### திருமதி செல்லையா இராஜேஸ்வரி (கிளி)

சுதுமலையை பிறப்பிடமாகவும் உயரப்புலம் மற்றும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா இராஜேஸ்வரி (கிளி) கடந்த (01.03.2022) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், சாந்தினி, ரஞ்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பவானி மற்றும் நந்தினி (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் தாயாரும், பாலேந்திரா, வசந்தாதேவி (பிரான்ஸ்), சிவகுமார் (லண்டன்), ஜெயகரா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, சிவானந்தராஜா, விகானந்தராஜா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், துர்க்கா-தருமஞானம், கஜனன் (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), நரேஸ், நவிதா, Dr.சுரேஸ்குமார், சுரேக்கா- றதீஸ், Dr.ஜனற்றன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியும், தர்ஷன், கற்றியா, கைலஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாவடி வீதி, மானிப்பாய்.**

தகவல்: குடும்பத்தினர்.

சாந்தினி பாலேந்திரா - T.P: 0094 777743224
ரஞ்சன் செல்லையா - T.P: 0033 683996877
நந்தினி சிவகுமார் - T.P: 0044 7801884683
சுகந்தினி ஜெயகரா - T.P: 0044 7588867252

(CS 43303) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 02 . 1952



மறைவு 27 . 02 . 2022

### திரு. சரவணமுத்து ஜோ. சிறீஸ்கந்தராஜா

(Electrician)

இல.748, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.123, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து ஜோ.சிறீஸ்கந்தராஜா அவர்கள் (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து கனகம்மா ஆகியோரின் அன்பான சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான பிலிப் யோசப் (றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ) நல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், ஜெயசிந்தா (சோதி, ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்) அவர்களின் அன்புமிகுந்த கணவரும், சகிலா (பிரான்ஸ்), சரண்யா (Nirushana Building Constructions (pvt) ltd), சௌமியா (ஆசிரியை, கிளி.இரணை தீவு றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சசிகரன் (பிரான்ஸ்), பிரசன்னா (மருத்துவ பிரதிநிதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மலர், சக்திகுமார் மற்றும் ராணி, ஆனந்தவடிவேல் (ஓய்வு நிலை சிரேஷ்ட முகாமையாளர், மக்கள் வங்கி), பேபி சரோஜா (கனடா), தேவி (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), விக்னேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜெயசீலி, ஜெயராணி, தேவி, விக்ரர் மற்றும் ஜெயவதி, அன்ரன், அருட்சகோதரி லூசியா (திருச்சிலுவைக் கன்னியர் சபை), ஜெயக்குமார், ஜெயமலர், பிலிப் துரைராஜா, மரியதாஸ் அலோசியஸ், காஞ்சனா, ஞானேந்திரா, இராஜலிங்கம், ஜேன், ஜெயாகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரியங்கா (பிரான்ஸ்), ஆதுரி, அஸ்மிதா, ஆதர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கமானது நாளை (04.03.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ் புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
வடிவேல் (சகோதரன்):- 077 153 9158
மனைவி:- 077 240 9709
சரண்யா (மகள்):- 077 393 2680
சௌமியா (மகள்):- 077 579 0751

123, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 18653) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உக்ரைன் தரும் கற்பிதம்!

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை உச்சம் கண்டிருகின்றது. உக்ரைன் தலைநகர் கீவ் ரஷ்யப் படைகளால் முழுவதுமாக ஆக்கிரமிக்கப்படும் நிலைக்குள் சென்றிருக்கின்றது. பல்வேறுபட்ட வல்லரசுகளின் உதவியுடன் உக்ரைனிடமிருந்து எதிர்பாராத வகையில் பதிலடி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், ரஷ்யா இன்னும் தன் முழுமையான பலத்தைப் பயன்படுத்தவில்லை. ஒருவேளை ரஷ்யா தன் ஒட்டுமொத்தப் பலத்தையும் வெளிக்காட்ட நினைத்தால் உக்ரைனால் தாங்கமுடியாது. அதெல்லாம் ஒரு புறத்தில் இருக்கட்டும். இப்போது எமக்குத் தேவை, ஏன் இந்தப் போர் மூண்டது? ஏன் இந்த அவசர இராணுவ நடவடிக்கை? என்ற வினாக்களுக்கான விடைகளே.

'பிராந்தியப் பதற்றத்தை' ஏற்படுத்த முனைந்தமைதான் இந்தப் போருக்கான பின்புலமும் முழுக்காரணமும். இலங்கை பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயமும் அதுதான்.


சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த நாடுதான் உக்ரைன். சோவியத்தின் உடைவின் பின்னர் உக்ரைனை தமது வசப்படுத்தி ரஷ்யாவுக்கு பிராந்திய அழுத்தத்தை வழங்குவதற்கு அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் முனைந்துகொண்டிருக்கின்றமைதான் இந்தப் பதற்றத்துக்கான காரணம். 2013ஆம் ஆண்டும் இதேபோல ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணையச் சென்றது. அப்போதும் ரஷ்யா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் விளைவாகத்தான் கிரிமியக்குடா ரஷ்ய எல்லையுடன் அடாத்தாகச் சங்கமிக்கவேண்டிவந்தது. அதன் பின்னர் கொஞ்சம் அமைதிகாத்த உக்ரைன், கடந்த வருடம் மீண்டும் முருங்கையேறியது. நேட்டோவில் தன்னை இணைத்துக்கொள்ள கடும் பிரயத்தனங்களை அந்த நாடு மேற்கொண்டது. அவ்வாறு நேட்டோவில் உக்ரைன் இணைந்தால் அது தனது பாதுகாப்புக்குப் பங்கம் என்று ரஷ்யா கருதுகின்றது. அதில் நியாயமும் இருக்கவே செய்கின்றது.

சரி, இந்த விடயத்தில் இலங்கைக்குரிய படிப்பினை என்ன? 'இறைமை' என்ற ஒன்றைக் காரணமாகச் சொல்லி, தான் நினைத்ததையெல்லாம் ஒரு நாட்டால் செய்துவிட முடியாது. பிராந்திய நலன், இன்னொரு நாட்டின் பாதுகாப்பு, எந்தெந்த நாடுகளோடு நெருக்கமான அரசியல், பொருளாதார உறவைப் பேணுதல் என்பவற்றையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது உலகமயமாக்கலின் பின்னர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையே இப்போதுள்ளது. எனவே, பிறநாடுகளில் ஏற்படும் தாக்கம் நமது நாட்டிலும் ஏதோவொரு விதத்தில் எதிரொலிக்கவே செய்யும். அதனை உக்ரைன் புரிந்துகொள்ளவில்லை. உக்ரைனைப்போல இலங்கையும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

உக்ரைன் தனது பிராந்தியத்தில் அளவுகடந்த அமெரிக்கத் தலையீட்டை அனுமதித்தமைபோன்று, கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கம் சீனத்தின் அளவு கடந்த தலையீட்டை இலங்கையில் தாரளமாகவே அனுமதித்திருக்கின்றது. இலங்கையின் நிலப்பரப்பை எந்த நாட்டுக்கும் எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று அரசாங்கம் தெரிவித்திருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இலங்கையில் சீனா காட்டும் அதீதப் பிரசன்னம் உண்மையில் நல்லதொரு அறிகுறியல்ல. வடக்கு மாகாண மீனவர்களுக்கு சீனா வழங்கிய உதவிகள் முதல் சீனத் தூதுவரின் வடக்குக்கான சுற்றுப்பயணம் என அனைத்தும் இந்தியாவை வெறுப்பேற்றும் செயல்கள்தான். இப்படியானதொரு கடந்த காலத்தைக் கொண்டிருந்த காரணத்தால்தான் இன்று உக்ரைனின் நிகழ்காலம் மோசமாகியிருக்கின்றது. இது இலங்கைக்கு ஒரு வரலாற்றுப் படிப்பினை. இதிலிருந்து பாடம்கற்க வேண்டிய பொறுப்பு இலங்கைக்கு உண்டு.

### நாளொரு நல்வார்த்தை

"உங்களை நீங்களே கண்டுபிடிப்பதற்கான சிறந்த வழி, மற்றவர்களுக்கான சேவையில் உங்களை நீங்களே இழப்பது தான்"
- *மகாத்மா காந்தி*




ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கை தொடர்பான விவாதம் பிற்போனது!

**கொழும்பு, மார்ச் 3**

**இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைமீது இன்று இடம்பெறவிருந்த விவாதம் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.**

உக்ரைனில் - ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையினால் உருவாகியுள்ள நிலைமை குறித்து மனித உரிமைப் பேரவை அவசரமாக விவாதிக்கவேண்டிய நிலை காணப்படுவதாலேயே இலங்கை குறித்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது. (ம)

# சுகாதார ஊழியர்கள் போராட்டம்; முடங்கின மருத்துவமனைகள்

வவுனியா,மார்ச் 3

18 தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தால், வடக்கில் உள்ள மருத்துவமனைகளின் செயற்பாடுகள் நேற்று முடங்கின. இதனால் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, அரசு இதுவரையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக, நேற்றுமுதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளை, சுகாதாரத் தொழிற்சங்க சம்மேளனம் ஆரம்பித்துள்ளது.

வடக்கில் உள்ள மருத்துவமனைகளின், கிளினிக் சேவைகள், குருதிப் பரிசோதனைகள், கதிரியக்க சேவைகள் மற்றும் மருந்தகம் போன்றன செயற்படவில்லை. இதனால் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (ஒ-4,110)

# நெல் அறுவடைக்காக விசேடமாக எரிபொருள்

மன்னார்,மார்ச் 3

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை அறுவடை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விசேட திட்டத்தில் எரிபொருள்கள் விநியோகிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் தற்போது நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், எரிபொருள்களை அதிகம் கொள்வனவு செய்து, வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு சென்று அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். அதனால் விவசாயிகளுக்கு விசேட திட்டத்தில் எரிபொருள்கள் விநியோகிக்கப்படும்.

விவசாய செய்கையின் ஏக்கர் அளவை, அந்தப் பகுதி விவசாய அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் உறுதிப்படுத்தினால், விவசாயிகள் தேவையான எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன் ஏற்கனவே நெல் அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் மீண்டும் எரிபொருள்களைக் கொள்வனவு செய்து சேமிக்காது, ஏனைய விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-4,56)

நாளை
04.03.2022
வெள்ளிக்கிழமை
மாசி 20
சுபநேரம் : 06.26 - 07.56
ராகுகாலம்: 10.56 - 12.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின் வைத்திருந்த இளைஞன் கைது

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரின் உடைமையில் இருந்து 2 கிராம் 255 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் நல்லூர் பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

ஈர விழிகளுடனும் வாடிய இதயங்களுடனும் சொரிந்திடும் கண்ணீர் பூக்கள்
31ம் நாள் நினைவஞ்சலி

கம்பர் மலையை பிறப்பிடமாகவும், கொம்மந்தறையை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் மகாலிங்கம் செல்லப்பாக்கியம்



அன்னை மடியில் 01.04.1939
இறைவனின் இல்லத்தில் 02.02.2022

அன்பிற்கோர் இலக்கணமாய்
பாசமிகு அன்னையாய்
மகிழ்விற்கோர் மனைவியாய்
வதன முகம் கொண்ட சோதரியாய்
பொறுமையின் பிறப்பிடமாய்
வந்துதித்த குடும்பத்தலைவியே
நீங்கள் பதியோடு கலந்து முப்பத்தொரு நாட்கள் தான்
ஆனால் எம்மோடு நீங்கள் வாழ்ந்திட்ட
இன்மய பொழுததனை மீட்டுப் பார்க்க
இன்று எமது அகம் வெந்துறுகின்றது
என்றும் உங்கள் நினைவோடு
துன்ப சாகரத்தில் வீழ்ந்து துடிதுடித்து நிற்கின்றோம்.
கண்ணீர் மழையில் நனைந்து அஞ்சலிக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவின் 31ம் நாள் சபிண்டீகரண நிகழ்வும், மதிய போசனமும் இன்று (03.03.2022) வியாழக்கிழமை மயிலியதனையிலுள்ள மகள் சுபத்திராவின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் கிரியைகளுடன் ஆரம்பமாகி நிகழ இருப்பதால் உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

(NE 18220 (4/6)

குடும்பத்தினர்

9 ஆம் ஆண்டு நினைவலையில்



தோற்றம் 04.07.1934
மறைவு 12.03.2013

அமரர் குணரத்தினம் மகேஸ்வரி

அன்பால் நிறைந்திட்ட எமது அம்மாவே!
மீளாத்துயில் கொண்டு நீவிர் எம்மை
ஆறாததுயரில் ஆழ்த்தி சென்று - இற்றைதனில்
ஆண்டு ஒன்பது ஆனது அம்மா!

அன்பு அக்காவாக! ஆருயிர் அம்மாவாக! ஆசை பெரியம்மாவாக!
இனிமையான மாமியாக ! ஈகைக் குணமுடைய மச்சாளாக!
உயிரான உறவோடு எம்மிடையே வலம் வந்தீர்!

காலங்கள் கரைந்தாலும் கோலங்கள் மாறினாலும்
உங்கள் நினைவலையின் நிழலடியில்!
மறவாத! உங்கள் அன்பான அரவணைப்பில
நாங்கள் நீக்கமற நிறைந்திருப்போம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி
மற்றும் உறவினர்கள்

(ஐ 43291) (2.6)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

# நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் அமரர் தில்காந்திக்குச் சமர்ப்பணம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பொதுப்பட்டமளிப்பு விழாவின் போது, ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சிபெறும் மாணவருக்கு வழங்கப்படும் 'யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்' இந்த ஆண்டு அமரர் நவரத்னம் தில்காந்திக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.



மொனராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த அமரர் செல்வி நவரத்னம் தில்காந்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் கல்விகற்று ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்று, யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அண்மையில் நோயுற்ற நிலையில் இயற்கை எய்தியிருந்தார். அவருக்குச் சமர்ப்பணம் செய்யும்வகையில் 'யாழ்.பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்' அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக 'யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்' வழங்கப்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக்கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இதையடுத்தே அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமரர் நவரத்னம் தில்காந்தி, ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரை மொ/ ஸ்ரீகௌரி தமிழ் வித்தியாலயத்திலும், க.பொ.த. உயர்தரத்தை மொ/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

உயர் தரத்தில் 2ஏ, பி பெறுபேற்றைப் பெற்றுக்கொண்ட தில்காந்தி, தனது முதல் பல்கலைக்கழகத் தெரிவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுத்தார். அரசியல் விஞ்ஞானம் மற்றும் ஊடகக் கற்கைகள் துறையில் முதலாம் வருடத்தில் பயின்ற அவர், இரண்டாம் வருடத்திலிருந்து ஊடகக் கற்கைகள் துறையைச் சிறப்புக் கலையாகப் பயின்றார். பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தவேளை, திடீரென இயற்கை எய்தினார். இன்று அவர் உயிருடன் இல்லாத நிலையில், இந்த விருது அவருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றது.

## தவக்கால சிந்தனை

### சமூகத்தைச் செதுக்கும் சிற்பிகளாவோம்

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"வாழ்க்கை என்பது நாணயத்தின் இருபக்கங்கள் போன்று இன்பமும் துன்பமும் கலந்ததாகும். கரும்பு ஆலையில் நெரிக்கப்படும் போதுதான் இன்சுவைப் பொருள்களைத் தருகின்றது. பலரும் துன்பநேரத்தில் நான் என்ன பாவம் செய்தேன். எனக்கு மட்டும் ஏன் இந்தத் துன்பங்கள்? என நினைப்பதுண்டு மாறாக துன்பங்கள் எமது தவறுகளைச் சீர் செய்து புதிய வாழ்வை அமைக்க உதவும் நுழைவாயில்களாகும்.

இறையாட்சியினுள் நுழைய நிச்சயம் தூய்மை வேண்டும். தங்கம் நெருப்பில் புடமிடப்பட்டு ஜொலிப்பது போல துன்பத்தைச் சுமந்து மேலெழும்போதே தூய்மையும், தெளிவும், பெற்று பிறரின் இன்னல்களையும் புரிந்துகொள்ளும் பக்குவம் கிடக்கும். நாமாக தேடிக் கொண்ட சிலுவைகளாயினும், பிறர் சுமத்திய சிலுவைகளாயினும் பொறுமையுடன் சுமந்து இறையரசின் இலக்கை அடைய வேண்டும். இதனையே இயேசுவின் பாடுகள், மரணம் கூறி நிற்கின்றது.

நாம் வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் உலகியல் போக்குகளை மாற்றிக்கொள்ளவேண்டும். கரைவதற்காகவே காற்றைத் தேடும் கற்பூரம்போல ஒளிகொடுப்பதற்காக உருகும் மெழுகுவர்த்திபோல எம்மை இழந்து பலன்கொடுப்போம். சிற்பம் செய்பவரெல்லாம் சிற்பியல்ல. சிற்பமாக வாழ்பவரே சமூகத்தைச் செதுக்கும் சிற்பிகள்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை

## திருச்சிச் சிறையிலுள்ள கைதிகளை விடுவிக்குக

யாழ்ப்பாணம்,மார்ச் 3

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு, திருச்சிச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று அவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவரிடம், எழுத்து மூலமான கோரிக்கையை அவர்கள் விடுத்தனர்.

தண்டனைக் காலம் முடிவடைந்தும் எமது உறவினர்கள் திருச்சி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஓ-4,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்

பரந்த கிளை வலைப்பின்னல்

Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு)

மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

எமது தயாரிப்புகள்

தங்கக் கடன்கள்

தனிப்பட்ட கடன்கள்

நுகர்வோருக்கான நிலையான கடன்கள்


வாகன லீசிங்

இலங்கை – BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)

www.mahindraifl.lk | Hotline Number: 011 7 724 724

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றது ஓ அனுமதி இல. (042) | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி – 24/1/2021)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் வெற்றிபெறுவீர்கள். கொடுத்த கடன் வசூலாகும். சுபநிகழ்ச்சி காரணமாக நெருங்கிய விருந்தினர் வருகை உண்டு. தள்ளிப் போன விஷயங்களை முடித்து நிம்மதி அடைவீர்கள்.

**இடபம்:** பல பணிகளைத் திறம்படச் செய்து பாராட்டு பெறுவீர்கள். கைவிட்ட விடயத்தில் புதுக்கோணத்தில் சிந்தித்து வெல்வீர்கள். எதிர்பாராத பாராட்டு காரணமாக சந்தோஷம் ஏற்படும்.

**மிதுனம்:** நியாயமான செலவினங்கள் அதிகரிக்கும். பயம் நீங்கும். சிரமங்கள் தீரும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பெண்கள் உதவி செய்வர். எதிர்பாராத நிகழ்வு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**கடகம்:** வெற்றி கிடைக்கும். உங்களின் புகழ் கூடும். பொறுப்பு அதிகரிக்கும். பொறுமையைக் கைவிட வேண் டாம். நல்ல செய்தி ஒன்று வரும். பதவி யில் இருப்பவர்கள் மூலம் நன்மை கிடைக்கும்.

**சிம்மம்:** நம்பியவர்கள் கைகொடுக்காமல் போனாலும் வெற்றி உண்டு. கடந்த வார அலைச்சல் காரணமாக ஏற்பட்டிருந்த களைப்பு நீங்கும். பணியிட சிரமத்தைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**கன்னி:** அனுபவ அறிவால் வெற்றி பெறுவீர்கள். பொறுமை கூடும். போராடி இலாபம் ஈட்டுவீர்கள். யாரையும் கேலி பேச வேண்டாம். மேலதிகாரியின் பாராட்டு உண்டு.

**துலாம்:** நெருங்கிய ஒருவர் செய்யும் உதவியால் நிம்மதி வரும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்படலாம். புதிய மாற்றம் உருவாகும் மற்றவரிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.


**விருச்சிகம்:** பிறரை பற்றி எவரிடமும் குறை கூற வேண்டாம். போட்டியில் வெல்வீர்கள். பணியாளர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். சந்தோஷ அலைச்சல் உண்டு. உங்களது நோக்கம் வெற்றி பெறும்.

**தனுசு:** எவருடனும் விவாதம் செய்ய வேண்டாம். பழி தரக்கூடிய செயலை செய்யாதீர்கள். குடும்பம் பற்றிய கவலை வந்து நீங்கும். பயம் தீரும். தேவையில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**மகரம்:** கோயில் திருப்பணிகளில் பங்கேற்பீர்கள். கலையார்வம் மிகும். விழிப்புத் தேவை. எதிர்பார்த்த முன்னேற்றத்தைக் காணலாம். முயற்சி வெற்றிபெறும்.

**கும்பம்:** மனமாற்றத்துக்கு ஏற்ப செயற்பாட்டை மாற்ற வேண்டாம். உங்களின் திட்டம் நிறைவேறும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. பிள்ளைகளின் செயலால் மகிழ்ச்சியும், நிம்மதியும் கூடும்.

**மீனம்:** புதியவர் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். பணி பற்றிய முயற்சிக்கு மேலதிகாரிகள் உதவி செய்வர். வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கு நீங்கள் எடுத்த முயற்சி வெல்லும்.



## பெரும் படையுடன்
# தலைநகர் கீவ்வில் ரஷ்யா தாக்குதல்!

மொஸ்கோ, மார்ச் 3
ரஷ்யா பெரும் படையுடன் உக்ரைன் தலைநகர் கீவ்வை நெருங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
மாக்ஸர் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக் கோள் படங்களை வெளியிட்டுள்ளது. அதில் உக்ரைன் அன்ரனோவ் விமான நிலையத்திலிருந்து 60 கி.மீற்றர் தொலைவுக்கு படைகள் அணிவகுத்து நிற்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.
உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை ஆரம்பித்து நேற்றுடன் 7 நாள்கள் கடந்துள்ளன. போருக்கு மத்தியில் உக்ரைனில் வாழும் பல்வேறு நாட்டு மக்களும் போலந்து, ஹங்கேரி, ருமேனியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துவருகின்றனர். இந்த நிலையில் நாளுக்கு நாள் இன்னும் அதிகமாகப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில் போரின் தீவிரத்தை வெளிக்காட்டும்விதமாக, மாக்ஸர் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக்கோள் படங்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளது.
இதில் ரஷ்யப் படைகள் போர் ஆயுதங்கள் மற்றும் இராணுவ வாகனங்களுடன் 40 கி.மீ தூரத்துக்குத் தொடர்ச்சியாக அணிவகுத்திருப்பதைக் காட்டுகிறது. மேலும் ரஷ்யப் படைகள் அணிவகுத்திருக்கும் சாலைகளில் உள்ள கட்டங்கள் பெரும்பாலும் தீப்பிடித்து எரிந்துகொண்டிருப்பது போன்றும் தெரிகிறது. ரஷ்யா பெரும் படையுடன் உக்ரைன் தலைநகரை நோக்கி நகர்வது அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஐரோப்பிய யூனியனில் இணைகின்றது உக்ரைன்?


மொஸ்கோ, மார்ச் 3
ஐரோப்பிய யூனியனில் இணைக்குமாறு கோரிய உக்ரைனின் விண்ணப்பத்தை ஐரோப்பிய நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
27 நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனில் இணையும் முயற்சிகளில் உக்ரைன் ஈடுபட்டு வந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா அந்த நாடு மீது போர் தொடுத்துள்ளது. ஐரோப்பிய யூனியனில் உக்ரைன் இணைவதற்கான விண்ணப்பத்தில் கடந்த திங்கட்கிழமை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கையெழுத்திட்டார்.
இதையடுத்து ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடாக உக்ரைனின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என ஐரோப்பிய நாடாளுமன்றம் அறிவித்துள்ளது. (ச-இ)

## ரஷ்யாவின் விமானங்கள் அமெ.வானில் பறக்கத் தடை?

மொஸ்கோ, மார்ச் 3
ரஷ்யாவின் அனைத்து விமானங்களும் அமெரிக்க வான்பரப்பில் பறக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தடை விதித்துள்ளார்.
உக்ரைனில் ரஷ்யா தனது கடுமையான இராணுவத் தாக்குதலை தொடர்ந்துவரும் நிலையில் பல நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.
இந்தநிலையில் அமெரிக்காவின் வாப்பரப்பில் ரஷ்ய நாட்டுடன் தொடர்புடைய அனைத்து வானூர்திகளும் பறப்பதற்கு தடைவிதிக்கப்படுகிறது என ஜோ பைடன் அறிவித்துள்ளார். மேலும் ரஷ்யாவை தனிமைபடுத்தி அந்த நாட்டின் பொருளாதாரத்தை முடக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# ரஷ்யப் பீரங்கியை திருடிய விவசாயி!
## வைரலாகும் காணொலி

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைன் - ரஷ்யா போர் இடம் பெற்றுவரும் நிலையில் கீவ் எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யாவின் பீரங்கி வாகனத்தை உக்ரைன் விவசாயி ஒருவர் தனது உழவியந்திரம் மூலம் திருடி இழுத்துச் செல்கின்றார்.
இந்தக் காணொலி தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகின்றது.
அந்தக் காணொலியில் விவசாயி ஒருவர் தனது டிராக்டரில் பீரங்கியை கட்டி இழுத்துச் செல்ல அதன் பின்னால் இராணுவ வீரர் ஒருவர் ஓடும் காட்சி இடம்பெற்றுள்ளது. இதனை பார்வையிட்டோர் "ரஷ்யாவின் படையெடுப்பு சிறப்பாக நடப்பதாகத் தெரியவில்லை" எனவும் "உக்ரைன் நாட்டை சேர்ந்தோர் மிகவும் கடின மானவர்கள்" எனவும் பதிவிட்டு வருகின்றனர். (ச-இ)



# கார்கீவ் நகரிலும் ரஷ்யா தாக்குதல்

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைனின் முக்கிய நகரங்களில் ஒன்றான கார்கீவ்வில் ரஷ்யப் படை பயங்கரத் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது என தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கார்கீவ் போன்ற முக்கிய நகரங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீதும் தாக்குதல் நடத்திய ரஷ்ய இராணுவம் சில இடங்களைக் கைப்பற்றியுள்ளது.
மேலும், கெர்சன் நகர் முழுமையாகக் கைப்பற்றப்பட்டுள்ளது என ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது. (ச-இ)

## உக்ரைனுக்கு அவசரநிதி உலக வங்கி வழங்கும்

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைனுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.
ரஷ்யாவின் தாக்குதலால் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ள உக்ரைனுக்கு நிதியுதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி முன்வந்துள்ளன.
இந்த நிலையில் உக்ரைனுக்கு முதற்கட்டமாக 3 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது. (ச-இ)

# உக்ரைனில் இந்திய மாணவர் உயிரிழப்பு

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைன் - ரஷ்யா போரில் கார்கீவ் நகரில் இந்திய மாணவர் ஒருவர் பலியாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கார்கீவ், கீவ் போன்ற நகரங்களில் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது.
இந்த நிலையில், இந்தப் போர்க்களத்தில் சிக்கி கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை
## காங்கேசன்துறை உப அலுவலகம்

### ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

**விண்ணப்பதாரர அருள்விளங்கு யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் நிர்வாகம்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை உப அலுவலகத்திற்குட்பட்ட இடன்தறை வீதி, காங்கேசன்துறை எனும் முகவரியில் அமைந்துள்ளதும் 446 ம் இலக்க 16.09.2020ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு திரு. கணபதிப்பிள்ளை சிவபாதம் முகதாவில் நிறைவேறிய பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் வந்தடைந்ததுமான தெல்லிப்பளைக் கோவிற்பற்று பளை இறை "இடன்தறை" நிலப்பரப்பு 08 குழி 14.6 இது 12.10.2018ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் V. தவராசா அவர்களால் 1603ம் இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை அருள்விளங்கு யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினர் தங்களது பெயரில் ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த ஆதனமானது மூதாதையர்களால் பல்லாண்டுகாலமாக ஆட்சிசெய்து வரப்பட்டது. ஆயினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவ்வுறுதிகள் அழிவடைந்தமையினால் கோயில் நிர்வாகத்தினர் தங்களது பெயரில் 446 ம் இலக்க 16.09.2020ம பிரகடனப்படுத்தல் உறுதியை எழுதியுள்ளனர்.

**ஆதன விபரம்**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை "இடன்தறை" உறுதிப்படி நிலப்பரப்பு எட்டு (08) குளி பதின்னான்கு தசம் ஆறு (14.6) இது 12.10.2018ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் V. தவராசா அவர்களால் 1603ம் இலக்கத்தில் அளந்து வரைந்த வரைபடத்தில் Lot 01 எனக் காட்டப்பட்டுள்ளது.

**இதன் எல்லைகள்,**

கிழக்கு எஸ். சிவசுப்பிரமணியத்திற்கும் மாதவமேனன் பெண் இந்திராணிக்கும், நடேஸ்வராக் கல்லூரிக்குமுரிய ஆதனங்கள்.

வடக்கு - சதாசிவம் கணேசனுக்கும், நடேஸ்வராக் கல்லூரிக்குமுரிய ஆதனங்கள்.

மேற்கு - இடன்தறை ஒழுங்கை

தெற்கு - ரி.இராஜேந்திராவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை அருள்விளங்கு யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினர் தங்களது பெயரிற்கு ஆதன உரிமையை உறுதிப்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே அருள்விளங்கு யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் நிர்வாகத்தினரது பெயரில் ஆதன உரிமையை உறுதிப்படுத்துவது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருப்பின் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாகாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிவடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை.**

(CS 18656) (4/6)


## அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.

வட்டாரம் :- 07
ஆதன இலக்கம் :- 462,464,466,468,470,472,474/2,474/4
யாழ். மானிப்பாய் வீதி.

வட்டாரம் 07, யாழ் மானிப்பாய் வீதி, ஆதன இலக்கம் 462,464,466,468, 470,472,474/2,474/4இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை "துரையில் வளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 14 கொண்ட இவ்வாதனமானது வன்னிச்சி அம்மன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிறிபதி திலகராஜசிங்கம் ஆகிய அவரால் புது வளவு வல்வெட்டித்துறை தர்மராணி உதயரத்தினம் அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.அ.க.நடராசா முக தாவில் நிறைவேறிய 26155ஆம் இலக்க 2016.04.09ஆம் திகதிய புளியங்கன்றடி சித்தி விநாயகமூர்த்தி ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமன உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனங்களானது புளியங்கன்றடி சித்தி விநாயகமூர்த்தி ஆலய நம்பிக்கை நிதியமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிஸ் சோமசுந்தரம் மகாதேவா முகாதாவில் நிறைவேறிய 300ஆம் இலக்க 1967.03.01ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் உறுதியின் மூலம் நம்பிக்கை பொறுப்பாளர் இராமசேது சிறிபதி மறுநாமம் சிவக்கொழுந்து நியமிக்கப்பட்டார். நில அளவையாளர் திரு.எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 3252யு ஆம் இலக்க 2017.06.02ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "துரையில் வளவு" நிலப்பரப்பு 14 கொண்ட புளியங்கன்றடி வித்தி விநாயகமூர்த்தி ஆலயமும் வீடும் கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து புளியங்கன்றடி சித்தி விநாயமூர்த்தி ஆலய நம்பிக்கை நிதியத்திற்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்.



(CS 18657) 1-6

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**17 . 09 . 1937**



**மறைவு**
**02 . 03 . 2022**

## திருமதி ஞானமணி பூபாலராஜா

**(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம், கொழும்பு)**

கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி சிங்கராயர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமணி பூபாலராஜா நேற்று (02.03.2022) புதன்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு.திருமதி கோபாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூபாலராஜாவின் அன்பு மனைவியும், கந்தசாமி, பரம்சோதி, கணேசமூர்த்தி, தணிகாசலம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற நவமணி-ராஜரட்ணம், ராசமணி-தங்கராஜா, மகேஸ்வரி-நாகேந்திரா, நேசமணி-குமாரசாமி, பூமணி-மகேந்திரன், தவமணி-நமசிவாயம், ஜெயமணி-ரட்ணகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராதாக்கிருஷ்ணன் (கண்டி), சாந்தினி, ராதமனோகரன (கனடா), ஸ்ரீரஞ்சனி (பிரான்ஸ்), ரேணுகா, ராதிகா (கனடா), மகிந்தன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.37, சிங்கராயர் லேன்,**
**புதிய செம்மணி வீதி,**
**நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**T.P: 021 2230 378**
**071 828 5753**

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 02.02.2022 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமாரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.03.2022) வெள்ளிக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். மறுநாள் (05.03.2022) சனிக்கிழமை அன்று பகல் 12.00 மணியளவில் வதிரி காளயந்தோட்டம் அருள்மிகு முத்துக்குமார சுவாமி கோவில் அன்னதான மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தம்பியோடை,
வதிரி, கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
21
.
05
.
1934



மறைவு
02
.
03
.
2022

## ஆறுமுகம் இராசையா

கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் பழையகமம் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராசையா அவர்கள் 02.03.2022 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னாச்சி தம்பதிகளின் மருமகனும் அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை (சின்னம்மா), சரஸ்வதிப்பிள்ளை (குஞ்சு), தவமணி, கதிரவேலு (செல்லையா), கனகரத்தினம் (இராசு), இராசமணி, மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரிபூரணம், காசிநாதன், சுப்பிரமணியம், வரதராஜன்(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் தயாறஞ்சினி (கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), மதிவதனி (கொக்குவில் இந்துக் கல்லூரி), அருந்ததி (முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்), தயாபரன் (கனடா), திருச்செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (யாழ் பல்கலைக்கழகம்), சிவானந்தநாதன் (இணுவில் மத்திய கல்லூரி), நந்தகுமார் (தருமபுரம் இல. 01 அ.த.க பாடசாலை), ஜெயந்தி (கனடா), ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரை, மாதுமை, அபிசாதன், பிங்கலன், அம்புஜன், அஞ்சனன், மஜிதன் (கனடா), கஜானன் (கனடா), பிரிஷா (கனடா), கேசிகா (லண்டன்), கனலோன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2022) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முரசுமோட்டை ஐயன்கோயிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழையகமம்,
முரசுமோட்டை.

(cs 18651) (2.6)

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
12
-
12
-
1946



இறப்பு
01
-
03
-
2022

## செல்லத்துரை கமலநாதன்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கமலநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வசந்தராணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வாசன் (லண்டன்), மயூரன் (கனடா), சுமிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவனேஸ்வரி (லண்டன்), மயூரதா (கனடா), ஆனந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சனா (லண்டன்), அஜீஸ் (கனடா), அக்ஷனா (கனடா), ஆதீஷ் (லண்டன்), ஆஷினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் பாலச்சந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், வசந்தமலர், ஜெயமலர், ஜெயதேவி, அமரர் விமலாதேவி, தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 18645) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்
2[illegible].12.1947

மறைவு
02.03.2022

## காசிப்பிள்ளை பரமானந்தம்

(சங்கானை காசிப்பிள்ளை அன்சன்ஸ் உரிமையாளரும் லக்ஷ்மி டிஜிற்றல் கலர்லாப் சங்கானை உரிமையாளரும்)

அரா்லி வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பரமானந்தம் அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலஷ்மியின் (ராணி) அன்புக்கணவரும், நிசந்தி (கனடா), நிரஞ்சன் (லக்ஷ்மி டிஜிற்றல் கலர் லாப்- சங்கானை), நிரஞ்சினி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுரேஸ் (கனடா), பவானி (ஆசிரியர்-யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி), முகுந்தன் (லக்ஷ்மி டிஜிற்றல் கலர் லாப்- மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அருளம்பலம் (அருளானந்தா புடைவையகம்-சங்கானை) மற்றும் மனோன்மணி, பரஞ்சோதி (காசிப்பிள்ளை அன்சன்ஸ்-சங்கானை), ஜெகதேவி, இராஜேஸ்வரி, மகேஸ்வரன் (காசிப்பிள்ளை அன் சன்ஸ்), கலோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரனும், பிரவின் (கனடா), ஜனனி (கனடா), தரணிகா (சங்கானை), தஸ்மிகா (சங்கானை), தக்சஜன் (மட்டக்களப்பு), தர்சிகன் (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
நிரஞ்சன்- 077 290 8787
மகேஸ்வரன்- 076 655 1274
முகுந்தன்- 077 132 1771

அரா்லி வீதி,
சங்கானை.

(CS 43308) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் வர்த்தக நிலையத்துக்கு வேலைக்கு ஆள் தேவை.

(CS 18654) (4/6) 077 440 9920, 077 773 7072



## சைவ வித்தியா விருத்திச் சங்கம் பதவி வெற்றிடங்கள்

**1. நிதி உதவியாளர் (பெண்)**
- க.பொ.த (உ/த) வில் வணிகத் துறையோடு HNDA. அல்லது அதற்கு இணையான தகுதி.
- கணினி அறிவு (MS office) இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை : 25 - 50
- சம்பளம் : ரூ.14,610+25%+ தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**2. களஞ்சியப் பொறுப்பாளர் + மேற்பார்வையாளர் (கட்டட நிர்மாணம்) - ஆண் (தரம் III)**
- தகைமை : க.பொ.த (உ / த)வுடன் துறை சார்ந்த சான்றிதழ்
- முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயதெல்லை : 25 - 65
- சம்பளம் : ரூ.18,250+25%+ தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00) - மீளளிக்கப்படக்கூடிய ரூபா 10,000.00 வைப்புத் தொகை.

**3. உபவிடுதிக் காப்பாளர் : ஆண் /பெண்**
- தகைமை : க.பொ.த (உ/த)வுக்குக் குறையாதது.
- IT யில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
- வயதெல்லை : 25 - 50
- சம்பளம் : ரூ.12,510+25%+ தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**4. சாரதி :**
- க.பொ.த (சா/த) அல்லது க.பொ.த (உ.த) வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், தீய பழக்க வழக்கங்கள் அற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- வாகனச் சாரதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (முச்சக்கர வண்டி மற்றும் இலகு வாகனம்)
- வயதெல்லை : 30 - 60
- அனுபவம் - 3 வருடங்கள்
- சம்பளம் : ரூபா 20,000 +25%+ தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**5. சமையலாளர்**
- அனுபவம் வாய்ந்த பெண் / ஆண் சமையலாளர் தேவை. இல்லத்தில் தங்கியிருப்பது விரும்பத்தக்கது.
- வயதெல்லை - 25 - 55 வரை .
- சம்பளம் : ரூபா 18,000+25%+ தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

* அனைத்து நியமனங்களும் 6 மாத தகுதிகாண் கால முடிவில் EPF, ETF திட்டத்தில் இணைக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 10.03.2022 வரை ஏற்றுக் கொள்ளப்படும். **சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**
தொலைபேசி இல : 021 222 6525

லோ.துஷிகரன்
செயலாளர்.

CR 371801 (2.6)


# விசுவமடு பொதுச்சந்தையில்

# பாவனைக்கு விடப்படாத குடிதண்ணீர்த் திட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 3

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள விசுவமடு பொதுச் சந்தையில் 2021 ஆம் ஆண்டு வடமாகாண சபையின் 'பி.எஸ்.டி.ஜி' நிதித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் திறந்து வைக்கப்படாத நிலையில் நீண்ட காலமாகக் காணப்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த குடிதண்ணீர்த் திட்டம் 1.5 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட போதும் நீண்ட காலமாக பாவனைக்கு விடப்படாத நிலையில் காணப்படுகிறது. தற்போது வணிகர்கள் குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதனால், குறித்த குடிதண்ணீர் திட்டத்தை விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு விட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(ய-19)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 31 • 08 • 1939



இறப்பு 14 • 03 • 2021

**அம்பலவாணர் பரமேஸ்வரன்**
(ஓய்வுநிலை கணக்காளர்)

திதி: பூர்வபக்க பிரதமை

என்றும் உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

19, கடலைப்புலம்,
சுன்னாகம். (cs 18635) (2.7)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சரவணமுத்து

(ஓய்வுநிலை தபாலதிபர்)



மண்ணில் 18.02.1931 விண்ணில் 01.03.2022

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரவணமுத்து (ஓய்வுநிலை தபாலதிபர்) நேற்று முன்தினம் (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அபிராமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நாகலிங்கம், அருணசாலம், சிவநாகம்மா ஆகியோரின் இளைய சகோதரரும்,சாரதாலட்சுமி, சாந்தினி (ஆசிரியை, நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை), சரோஜினி (காப்புறுதி ஆலோசகர், யூனியன் அஸ்யூரன்ஸ்), சத்தியதேவி (தாதிய உத்தியோகத்தர் - யா/ போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.03.2022) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்


## ஸ்கானருடன் ஐவர் கைது

வவுனியா நகரப்பகுதியில் நிலத்தை 'ஸ்கான்' செய்யப் பயன்படும் இயந்திரத்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - மடுகந்தை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய வவுனியா மரக்கறிச்சந்தைப் பகுதி யில் பயணித்த கப் வாகனத்தை சோதனையிட்டபோதே குறித்த இயந்திரம் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து வாக னத்தில் பயணித்த ஐவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து, வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கைது செய்யப்பட்டவர்கள் புத்தளம், முல்லேரியா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்ததோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-ரி1,110)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 09.05.1951 உதிர்வு 01.02.2022

திருமதி.
**புவனேஸ்வரி சண்முகலிங்கம்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட எங்கள் அம்மாவே
நாட்கள் முப்பத்தொன்றாகி இன்றும் உங்கள்
நினைவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகளில் கலந்து உதவிகள் புரிந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணவர்– 0777 521 316

தகவல்– குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



**திரு. தெய்வேந்திரம் அருட்செல்வன்**

துர்க்கை அம்மன் கோவிலடி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தெய்வேந்திரம் அருட்செல்வன் நேற்று (02.03.2022) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் (இ.போ.ச.நடத்துனர்), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா (தபாலதிபர் - முரசுமோட்டை), அன்னலெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மருமகனும், வனிதா (அதிபர் - யாழ். புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், தக்ஷாயினி (சுகர்னி வைத்தியசாலை), லுஜிஷாந், மௌலிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செல்வன், சசிகலா, சிவதாஸ், சசிகரன், சுதாகரன், கிருபாகரன், குணதாசன், பகீரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினி, புவியரசி, காலஞ்சென்ற ரவீந்திரன், கலையரசி, உருத்திரா, சறோஜினி, ரஞ்சினி, சுகந்தாதேவி, குணநேசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், குமாரதேவனின் (அப்பன் ஆட்டோ) சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 940 0752
077 870 2776

(cs.43292) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 03.03.2014 தொடக்கம் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றி நேற்று 02.03.2022 முதல் பாதுகாப்பு பரிசோதகராக பதவி உயர்வுபெற்ற எமது சங்க முன்னாள் செயலாளர்

### திரு. கணேஸ் புஸ்பதீபன்




அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம். இவர் மென்மேலும் பதவியுயர்வுகளைப் பெறவும் சேவைக் காலம் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(cs.43302) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 03.03.2014 தொடக்கம் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றி நேற்று 02.03.2022 முதல் பாதுகாப்பு பரிசோதகராக பதவி உயர்வுபெற்ற எமது சங்கத்தின் தற்போதைய தலைவர்

### திரு. பத்திமதாசன் டிமல்ராஜ்




அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மென்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெறவும் சேவைக் காலம் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(cs.433302) (2.6)


### இலங்கைத் தமிழர்களுக்கு

# சுதேச மருத்துவத்தை வழங்குவதில் மகிழ்ச்சி

## இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

சித்த மருத்துவத்தை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன் என இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்தியத் துணைத் தூதரகமும், வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் முல்லைத்தீவு - விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதேச மருத்துவம் தமிழ் கலாசாரத்துக்கே உரிய ஒரு வாழ்க்கை முறை. நாட்டு வைத்தியம் நம்மிடம் பல நூறாண்டு காலமாகவுள்ளது. இலக்கியங்களிலும், காவியங்களிலும், சித்த மருத்துவத்தின் குறிப்புக்கள் சித்தர்களை பற்றிய குறிப்புகள் நம்மிடம் உள்ளன. வெளிநாட்டினர் இவற்றை மொழிபெயர்த்து எடுத்துச் செல்கின்றனர். அவற்றின் பயன்களை நாம் முடிந்தளவு அனுபவிக்கவேண்டும் - என்றார்.

(வ-19)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று (03.03.2022) தனது 28 ஆவது பிறந்ததினத்தையும், யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் நடைபெறும் 35 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில்

### சட்டமாணி (L.L.B)

பட்டமும் பெறும்

### பழனியாண்டி துசாந்

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மா, அக்காமார், அத்தான்மார்,
மருமகன்மார் (கபினாஸ், அனுசாந்)
மருமகள்மார் (ஹரினி, அஸ்வினா, கிருசி)

வேம்பொடுகேணி,
பளை.

# மணிவிழா வாழ்த்து

## 03.03.2022

## திருமதி வசந்தி மகேந்திரன் (B.Ed)

### (உதவி அதிபர்)




Congratulations!

Congratulations!

**சேவை விவரம்:**

- முன்னிலை சேவைப்பயிற்சி (யா/ பரியோவான் கல்லூரி) - 20.01.1989 - 30.01.1989
- யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை - 24.04.1989 - 04.02.1991
- யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை - 05.02.1991 - 03.01.1993
- யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம் - 04.01.1993 - 31.12.1995
- மு/ அளம்பில் றோ.க.பாடசாலை - 01.01.1996 - 20.03.1997
- மு/ உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் - 21.03.1997 - 13.05.2012
- மு/ சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் - 14.05.2012 - 17.06.2015
- மு/ வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசாலை - 18.06.2015 - 02.03.2022

**உதவி அதிபராக, புலமை மிகு ஆசிரியராக,** ஆசிரியர்கள், மாணவர்களின் மனங்களில் இடம்பிடித்த அன்பு உள்ளமாக, வழிகாட்டியாக, சிறந்த ஆலோசகராக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடையவராக **முப்பத்து மூன்று ஆண்டுகள் சேவையாற்றி**

**இன்று மணிவிழாக்காணும் ஆசிரியை திருமதி வசந்தி மகேந்திரன்**

அவர்களை பல்லாண்டு காலம் வாழ அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

**மு/வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலையில்**

**ஏழு ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெறும் ஆசிரியை**

இன்று போல் என்றும் புன்முறுவல் பூத்த முகத்துடனும், இளமையுடனும், எல்லாச் சிறப்புக்களும் பெற்று வளமுடன் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**
**மு/வெட்டுவாய்க்கால் அ.த.க பாடசாலை,**
**வட்டுவாகல், முல்லைத்தீவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 600...

தற்போது இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு ஏறத்தாழ முடிந்துள்ள நிலையில், அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதி நெருக்கடி நிலையை அதிகரிக்கும் என்று கருதப்படுகின்றது. அதனால் அவசியமான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் எரிபொருள் பிரச்சினை பூதாகரமாகியுள்ள நிலையில், நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நீண்டநேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது என்று தெரியவருகின்றது.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அதிகாரிகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின்னர் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்படாது என்று தெரிவித்தனர்.

அதேநேரம், நாட்டில் நேற்று எரிபொருள் தட்டுப்பாடு தீவிரமடைந்திருந்தது. நாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

இரவு வேளையிலும் மக்கள் நீண்ட வரிசைகளில் காணப்பட்டனர்.

அதேவேளை, இலங்கை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களாகப் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளை அரசாங்கம் கிடப்பில் போட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் கப்பல்களுக்கு கட்டணம் செலுத்துவது என்பது தற்போதைய பிரச்சினை இல்லை என்று தெரிவித்துள்ள ஆளுநர், அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கே தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மின்விநியோகம், எரிபொருள் விநியோகம் சில தினங்களில் சீராகும் என்று அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூறி வருகின்றபோதும், நாடு எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-இ)

### பச்லெட்டை...

கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் நிலையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இலங்கையில் நடந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் நகர்வுகள் தொடர்பாக கொழும்பு பேராயர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் இந்தச் சந்திப்பில் விவரித்தார் என்று தெரியவருகின்றது.

அதேநேரம், கொழும்பு பேராயர் வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசரையும் சந்தித்திருந்தார். (எ-இ)

### மசகு...

ஏற்பட்ட அதிகூடிய விலை உயர்வு இது வாகும்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையிலான போர் மற்றும், ரஷ்யா மீதான ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத் தடை என்பவற்றாலேயே மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

### இலங்கை...

இந்தக் கப்பலில் 37 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் டீசல் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், கப்பலுக்கான கட்டணம் 31 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளது என்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையான நாள்களில் நான்கு எரிபொருள் தாங்கிக் கப்பல்கள் இலங்கையை வந்தடைய உள்ளன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் சமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த நான்கு கப்பல்கள் எதிர்வரும் 4, 6, 9 மற்றும் 12 ஆம் திகதிகளில் இலங்கைக் கடற்பரப்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், அவற்றுக்கான டொலரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-இ)

### இன்று...

பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவுகாண் தொழில்நுட்பவியலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாகவே பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று நிறுத்தப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பதில் பணிப்பாளர் மருத்துவர் கே. நந்தகுமார் தெரிவித்தார். (அ-எ-இ)

### கடலில்...

என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை விமலகுமார் (வயது-61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

காலைக் கடன்களுக்காகச் செல்வதாகக் கூறிச் சென்றவர் பின்னர் உயிரிழந்த நிலையில் இனங்காணப்பட்டார்.

சடலத்தை மீட்ட பொலிஸார் மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26,23,125)

### இன்றும்...

இரண்டரை மணிநேர மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### வீடு....

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நடந்துள்ளது.

நவாலி வடக்கு, திருச்சபை வீதியில் உள்ள வீடொன்றில் உள்ளவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்த கும்பல் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பட்டா வாகனம் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன், வீட்டிலிருந்த இளைஞர் மீதும் தாக்குதல் நடந்த முயன்றுள்ளது.

கும்பலிடம் இருந்து இளைஞன் தப்பியோடிய நிலையில், இளைஞரின் தந்தை மீது கும்பல் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. நடராசா அருள் றொபின்சன் (வயது-48) என்பவரே தாக்குதலில் காயமடைந்தார்.

கூக்குரல் சத்தம் கேட்டு கூடிய அயலர்களின் உதவியுடன் தாக்குதல்தாரிகளில் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

பிடிக்கப்பட்டவரிடம் இருந்து வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பிடிக்கப்பட்டவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ-எ-125)

### ரஷ்யாவிடம்..

கோரியுள்ளது. மசகு எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு கடன் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை தற்போது ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள தடைகளால் ரஷ்யா பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

### யாழ்....

அறியமுடிகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இணைப்புச் செயலாளராக கீதநாத் காசிலிங்கம், வடக்கு, கிழக்குக்கான விசேட மீள்குடியேற்ற ஒருங்கிணைப்பாளராகவும் செயற்படுகின்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் செயற்படுகின்றார். இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பல தரப்புக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், முறைப்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் எல்லைமீறிச் செல்கின்றது என்றும், பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தடையாக இருக்கின்றது என்றும் பல தரப்புக்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

அண்மையில் வலி.தெற்கு பிரதேச சபையிலும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரதும், அவர் சார் தரப்புக்களினதும் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப மக்களின் தேவைகளை நிர்ணயிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதேச சபை உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கான பிரதமரின்பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிய முடிந்தது. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்த நியமனத்தை வழங்கியுள்ளார் என்று அறிய முடிகின்றது. (அ-எ-இ)

### உக்ரைனின்...

ரஷ்யா கடும் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது. உக்ரைனின் தெற்குப் பிராந்தியத்தில் உள்ள கெர்சன் நகர்தங்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்று ரஷ்யப் படைகள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் 7 ஆவது நாளாகத் தொடரும் நிலையில், உக்ரைன் படைகளும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ரஷ்யத் தரப்பில் இதுவரை 6 ஆயிரம் இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் என்று உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஸெலென்ஸ்கி நேற்றுத் தெரிவித்தார்.

அதேநேரம், உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் மற்றொரு பெரிய நகரான கார்கிவ் என்பவற்றுக்குள் ரஷ்யப் படைகள் நுழைந்துள்ள நிலையில் அங்கு மோதல்கள் தொடர்கின்றன.

அதேநேரம், சைடோமிர் நகரில் உள்ள மகப்பேற்று மருத்துவமனை உட்பட 10 கட்டடங்கள் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன என்றும் அதில் இருவர் உயிரிழந்ததுடன், 16 பேர் காயம் அடைந்துள்ளனர் என்றும் உக்ரைனின் அவசரகால மையம் தெரிவித்தது.

அதேநேரம், உக்ரைன் ரஷ்யா இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கும் நிலையில், உக்ரைனுடனான பேச்சுவார்த்தைக்கு தடையாக இருப்பது அமெரிக்காவே என்று ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

மூன்றாம் உலகப் போர் , அணு ஆயுதங்களால் நடத்தப்பட்டால் மிகப் பெரிய அழிவு ஏற்படும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை எச்சரித்துள்ளது.

மறுபுறத்தில் மேற்கு நாடுகள் கூட்டாக ரஷ்யா மீது விதித்துவரும் தடைகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தை ஒட்டுமொத்தமாக உலுக்கியிருக்கின்றன. அங்கு இயங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் திவாலாகும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளன. (அ-எ-இ)

## இந்தியத் துணைத்தூதரக ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பில் மருத்துவமுகாம்

இந்தியத் துணைத் தூதரகம், வடமாகாண சுதேச சித்த மருத்துவ திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், விசுவமடுப் பகுதியில் இலவச சித்த மருத்துவமுகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது 200க்கும் அதிகமானவர்கள் இதில் கலந்துகொண்டு பயனடைந்தனர். முகாமில் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ், வடமாகாண சுதேச சித்த வைத்தியர் திருமதி ஜெபநாமகணேசன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர், கிராம அலுவலர், பொதுஅமைப்புக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தமிழரசு வெளிப்படுத்தவில்லை!



## ஜெனிவாவுக்கான கடிதத்துக்கு காரணம் சொல்கிறார் சிவாஜி

**கொழும்பு, மார்ச் 3**

**தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் ஜெனிவாவுக்கு தனியாக கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

கட்சிகள் ஒவ்வொன்றும் தனியாக ஜெனிவாவுக்குக் கடிதம் எழுதியமை தொடர்பாக வல்வெட்டித்துறையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறை ஜெனிவாவுக்கு தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடு தலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசி யக் கட்சி ஆகிய 5 கட்சிகள் கூட்டாக தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வடக்கு- கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்திக் கடிதத்தை எழுதியுள்ளன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி போன்றவை இதுவரை சர்வதேச சமூகத்திடம் சர்வசன வாக்கெடுப்புத் தேவை என்ற விடயத்தை வலியுறுத்தவில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களது முழுமையான நிலைப்பாட்டை கட்சிகள் வெளிப்படுத்தாத காரணத்தால் நாங்கள் தனியாக ஜெனிவாவுக்கு கடிதத்தை அனுப்பியுள்ளோம்.

ஒரே நிலைப்பாட்டில் கட்சிகள் இருக்குமானால் ஜெனிவாவுக்கு பல்வேறு கடிதங்கள்போக வேண்டிய தேவையிருக்காது - என்றார். (ம-20)

## லொத்தர் சீட்டுகளுக்கும் தட்டுப்பாடு

**கொழும்பு,மார்ச் 3**

அச்சிடுவதற்குத் தேவையான காகிதம் இன்மையால், லொத்தர் சீட்டுகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கொழும்புக்கு வெளியில் மொத்தமாக விற்பனைக்கு கொண்டு செல்லப்படும் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை லொத்தர் விநியோகஸ் தர்கள் சங்கத்தின் தலைவர் கிரிஷான் மரம்பகே தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)


### யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் பழைய மாணவர் சங்கம் - வருடாந்த பொதுக்கூட்டம்

- தலைவர் : திரு. அ. கிருபானந்தமனுநீதி அவர்கள்
- காலம் : 20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை) 9.30 மணி
- இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

யா/ விக்ரோறியாக் கல்லூரி. பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (20.03.2022) (ஞாயிறு) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.இக் கூட்டத்தில் சமர்பிக்க பிரேரணைகள் ஏதும் இருப்பின் செயலாளருக்கு கூட்டத்திகதியிலிருந்து ஒரு கிழமைக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்பும் பழைய மாணவர்கள் அங்கத்துவத்தைப் பெற்று கூட்டத்தில் பங்குபற்ற முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

(தி.உதயசூரியன், ஜே.பி.) கௌரவ செயலாளர். (cs.43292) (2.7)
சுழிபுரம் 03.03.2022

### பணிப்பெண் தேவை

ஏழாலை வடக்கில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று பார்வை இழந்த வயோதிப பெண்மணியை பராமரிக்க பணிப்பெண்கள் தேவை. வந்து போகக்கூடியவர்களும், தங்கி நிற்கக் கூடியவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம். (CS 43306) (4/6)

077 197 0065

### தேவை

உரும்பிராய் கிட்ஸ் பார்க், உரும்பிராய்
முகாமைத்துவ உதவியாளர்
(பெண்) கணினி அறிவு பரிசீலிக்கப்படும்..
(cs.43305) (2.6)

077 656 5258, 021 205 4626

### உடனடி வேலைவாய்ப்பு

யாழ்நகரில் இயங்கும் Guest House ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- Cleaning Staffs (இருபாலாரும்)
- Room Boys (பகுதிநேரம் / முழுநேரம்)

(வயதெல்லை 18 -25)
உணவு, தங்குமிடம் இலவசம்
(cs.43288) (2.6)

077 700 3617


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 01 . 1950 — மறைவு 02 . 03 . 2022



### கந்தசாமி அற்புதராணி

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அற்புதராணி அவர்கள் நேற்று (02.03.2022) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்ற இராசையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் (கீதா ஜுவல்லறி உரிமையாளர்- சாவகச்சேரி) அன்பு மனைவியும், சுஜாதாயினி (கனடா), ஜீவகாந்தன் (கீதா ஜுவல்லறி உரிமையாளர்- கனடா), ஜீவகீதா (சுவிஸ்), கௌசிகா (ஆசிரியர்-வீரசிங்கம் மத்திய கல்லூரி), கோமகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- மாவட்டச்செயலகம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சுதாகரன் (கனடா), ராதிகா (கனடா), சதீஸ்குமார் (சுவிஸ்), கஜீபன் (ஆசிரியர்- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), திவ்யா (நில அளவை அலுவலகம்-கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனனி, ஜனோஷன், அக்ஷயா, கனிஷ்டா, கஜன், காயத்திரி, கயானன், சஞ்யை,கிருத்திகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கராஜா, கோகுலராணி, சண்முகராஜா மற்றும் நடராஜா, நவரட்ணம், கணேசமூர்த்தி, தயாபரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை சாவகச்சேரி
(CS 18663) (4/6)
தகவல்: குடும்பத்தினர் 077 304 9893


### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)

- ✓ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ✓ லங்கா அசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
- ✓ நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
- ✓ யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
- ✓ 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்
- ✓ நன்னீர்ச்சூழல்

(CS 18660) (4/6)

தொடர்பு :
குரு - 077 6234 204, 077 2880 152, 076 6583 621,077 9116 983

### Physice

- ✓ Day Class-A/L 2022
  ஆரம்பம் :- 04/03/2022 Fri:- 6.00pm
  *முழுப்பாடத்திட்டமும் ஆரம்பத்திலிருந்து பூர்த்தி செய்யப்படும்.
  *Short notes, Revision, கடந்த கால வினா, மாதிரி வினாக்கள், Exam
- ✓ A/L 2022
  ஓட்ட மின்னியல்
  ஆரம்பம்:- 04/03/2022 Fri:- 8.00pm (Mon-Fri:- 8-9pm)
- ✓ A/L 2023 வகுப்பு நடைபெறுகின்றது.
- ✓ வெளி மாவட்ட மாணவர்களும் Zoom ன் ஊடாக தொடர்பு கொள்ளலாம்.
- ✓ Personal Class, Group Class ஆக கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

(CS 18661) (4/6)

T.P:- 077 611 6724
ஆசிரியர்:- திரு.M.ஸ்பெல்மன் (Bsc,PGDE)
10/10, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம்

### VCM INSTITUTE

Near the Manogara Junction, K.K.S Road. Jaffna.

A/L 2021 REPEAT
இணைந்த கணிதம்
B.Raveendran (B.Sc)
ஆரம்பம் : 07.03.2022 திங்கள் காலை 7.30 மணி

077 833 8394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org